Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, NOVEMBER 03, 2023

வெள்ளிக்கிழமை நவம்பர் 03, 2023 | ஒளி: 09 கதிர் 120 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# 485 பேருக்கு எச்.ஐ.வி தொற்று



2023ஆம் ஆண்டு கடந்த சில மாதங்களில் 485 எச்.ஐ.வி. தொற்றாளங்கள் கண்டறியப்பட்டுள்ளனர் என தேசிய பாலியல் நோய் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஜானகி விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

2022ஆம் ஆண்டினை விட இந்த வருடம் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

# “பொருளாதார வளர்ச்சி +7”



**கடினமான தீர்மானங்களை மேற்கொள்வது பாராளுமன்றுக்கு நெருக்கடி**

**சுமூகமான பொருளாதார நிலைமையொன்றை உருவாக்க முயற்சி**

யாசகம் செய்யும் நாட்டுக்குப் பதிலாக வலுவான பொருளாதாரத்தை கொண்ட நாடொன்றை கட்டியெழுப்புவது எந்த அளவு கடினமாக இருந்தாலும் அதற்கு அவசியமான தீர்மானங்களை தற்காலத்தில் உரிய வகையில் மேற்கொள்ள வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

எமது பொருளாதார வளர்ச்சி இவ்வருடத்தில் +7 ஆக காணப்படுகின்றது. இயன்றளவில் நூற்றுக்கு + 5 ஆக காணப்படுகின்றது. அதனால் நாம் தொடர்ச்சியாக முன்னோக்கிச் செல்வதா பின்னோக்கி நகர்வதா என்பதை தீர்மானிக்க வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2

# நவம்பர் 13 பட்ஜெட்: 26 நாட்களுக்கு விவாதம்

2024 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகள் மீதான விவாதம், 26 நாட்களுக்கு இம்முறை நடைபெறவுள்ளது. வரவு-செலவுத்திட்ட உரை நவம்பர் 13 திங்கட்கிழமை மதியம் 12 மணிக்கு நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்மசிங்கவினால் நிகழ்த்தப்படும்

தொடர்ச்சி P2

# தலைமன்னாரில் துறைமுக அறிவிப்பு



தலைமன்னார் முனையத்தை அண்மித்த பகுதியைத் துறைமுகமாக வர்த்தமானியில் பெயரிடுவதற்கு கப்பற்றுறை மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

# சீனத் தூதுவர் யாழ். விஜயம்



இலங்கைக்கான சீனத் தூதுவர் கி லென்ஹோங் (Qi Zhenhong) எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

சீன தூதுவர் தலைமையிலான இந்தக் குழுவினர் வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் யாழ். மாநகர சபை ஆணையாளர் ஆகியோருடன் உத்தியோகபூர்வ சந்திப்புகளை நடத்த உள்ளனர்.

தொடர்ச்சி P2

## சீனக்குடாவில்...



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோர் திருகோணமலை சீனக்குடாவில் உள்ள IOC யினை வியாழக்கிழமை (02) பார்வையிட்டனர். மேலும் இந்நிகழ்வில் No 11,12 gasoil tank திறந்து வைக்கப்பட்டது. இதில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பால்கே உட்பட பல உயரதிகளும் கலந்து கொண்டனர்.

(ஹஸ்பர்)



# இலங்கை-இந்தியாவுக்கு இடையில் மீண்டும் பேச்சு

2018ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தப்பட்டிருந்த பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பான முன்னெடுப்புக்களை மீள ஆரம்பிக்கும் வகையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான 12ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை, ஒக்டோபர் 30ஆம் திகதி முதல் நவம்பர் 1ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்றது.

தொடர்ச்சி P2

# நாமல் விடுதலை



கவர்ஸ் கோப்ரேட் நிறுவனத்துடன் தொடர்பான வழக்கிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உட்பட அனைத்து பிரதிவாதிகளையும் விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசு தரப்பு சாட்சியங்கள் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ள முடியாதவை என சுட்டிக்காட்டிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க, வியாழக்கிழமை (02) இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

# “டிஜிட்டல் மயமாக்கப்பட்டால் திருட்டு ஓரளவேனும் குறையும்”



**வரி செலுத்தாதோரிடமிருந்தும் முறையாக வறி அறவிடப்பட வேண்டும்**

VATக்கு பதிலாக, தற்போதைய வரி அறவீட்டு முறை அல்லது வரி நிர்வாகம் மிகவும் செயற்திறன் மிக்கதாக மாற்ற வேண்டும் என்றும் அதை வெளிப்படைத்தன்மையாக டிஜிட்டல் மயமாக்குவதற்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர் எனவும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டால் திருட்டு ஓரளவேனும் குறையும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ஒரே விலையில் தேயிலை உரம்



இலங்கையில் தேயிலை பயிர்ச்செய்கைக்கு தேவையான உரத்தை ஒரே விலையில் வழங்க அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களும் இணக்கம் தெரிவித்துள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# மைத்திரி உள்ளிட்ட நால்வரின் சொத்து விபரங்களை சமர்ப்பிக்கவும்

## உயர்நீதிமன்றம் உத்தரவு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட நால்வரின் சொத்து விபரங்களை சத்திய கடதாசி மூலம் நீதிமன்றத்தில் சமர்பிக்குமாறு உயர் நீதிமன்றம் வியாழக்கிழமை (02) உத்தரவு பிறப்பித்துள்ளது.



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 13 அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணைகளின் போதே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

தொடர்ச்சி P2

# கடலை, பயிறு, பால்மா விலைகள் குறைப்பு

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இரண்டின் விலையை லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது. இந்த விலைக் குறைப்பு வியாழக்கிழமை (02) முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

தொடர்ச்சி P2

LANKA Sathosa
ලංකා සතොස லங்கா சதொச
Lowest Price | Your Place

# “அம்பிட்டியவின் செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ளவே முடியாது”

வடக்கு - கிழக்கு விவகாரங்களில் அரசாங்கம் பக்கச்சார்பற்ற முறையில் செயல்பட வேண்டும் என அஸ்கிரிய பீடத்தின் செயலாளர் கலாநிதி மதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

பௌத்த பிக்குகள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு முன்னர் வடக்கு - கிழக்கு தொடர்பான விவகாரங்களை கையாளும்போது பக்கச்சார்பற்ற விதத்தில் அவை கையாளப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

# சம்பந்தனின் பதவி நீக்கம் குறித்து டக்ளஸ் கருத்து

**தமிழ் மக்களுக்கு கிடைக்கப் போவது ஏமாற்றமே**



பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனின் பதவி நீக்க விவகாரம் தொடர்பாக அலட்டிக் கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழரசுக் கட்சியின் விவகாரத்தினை அந்தக் கட்சி சார்ந்தவர்களே தீர்மானிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# சசி தரூர் -சஜித் சந்தித்துப் பேச்சு



இந்தியாவின் புகழ்மிக்க புத்திஜீவியும், திருவனந்த புரத்துக்கான மக்களவை உறுப்பினருமான கலாநிதி சசி தரூருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பொன்று புதன்கிழமை (01) இடம்பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த தேசிய அறிஞர்கள் பேரவையின் ஏற்பாட்டில் “அரச ஆளுகையின் தீர்க்கமான அம்சங்கள்” குறித்து கலந்துரையாடும் பயிலரங்குத் தொடரின் மற்றுமொரு கட்டமாகவே இச்சந்திப்பு இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## சசி தரூர் -சஜித்...

2015ஆம் ஆண்டு ஒக்ஸ்பேர்ட் (oxford ) பல்கலைக்கழகத்தில் கலாநிதி சசி தரூர் ஆற்றிய உரை இந்திய அரசியலிலும் இந்திய சமூகத்திலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியதோடு, இன்றும் பல இந்தியர்கள் குறித்த பேச்சை நூற்றாண்டின் பேச்சாகவும் கருதுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் உயர் பதவிகளை வகித்த அவர், சிறந்த இராஜதந்திரியாகவும் மதிக்கப்படுகிறார். இச்சந்திப்பில் பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், சூழலியல் சுற்றுலா முறைமை தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் யோசனைகள் பரிமாறப்பட்டன.

## மைத்திரி உள்ளிட்ட...

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ, முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரச புலனாய்வு சேவை பிரதானி நிலந்த ஜயவர்தன ஆகியோரின் சொத்து விபரங்களையே சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த சொத்து விபரங்களை சத்தியக் கடதாசி மூலம் டிசெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு நீதிமன்ற உத்தரவிட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நஷ்டஈடு செலுத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில், அந்த உத்தரவை முழுமைப்படுத்த முடியாத நால்வருக்கே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

## கடலை, பயிறு,...

இதன்படி, ஒரு கிலோ கிராம் கடலையின் விலை 9 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 540 ரூபாவாகும். மேலும், பாசிப்பயறு ஒரு கிலோகிராம் விலை 77 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 998 ரூபாவாகும்.

இதேவேளை, சதொசவில் நவம்பர் 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பால் மாவின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 400 கிராம் பால் மா பொதி ஒன்றின் விலை 22 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 948 ரூபாவாகும்.

## சம்பந்தனின் பதவி நீக்கம் குறித்து டக்ளஸ் கருத்து

தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக கடந்த பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட இரா.சம்பந்தன் பதவி விலக வேண்டும் என்ற கருத்து தொடர்பில், ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பிரச்சினைகளைத் தீராப் பிரச்சினையாக வைத்திருக்கும் மனோநிலையை கைவிட்டு, மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உளப்பூர்வமான செயற்பாட்டை வெளிப்படுத்த முன்வராத வரையில், அவ்வாறான கட்சிகளுக்குத் தலைவராக யார் செயற்பட்டாலும், ஏமாற்றத்தை தவிர வேறு எதுவும் தமிழ் மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை.

ஏனெனில், எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை பெற்றுத் தருகின்றவர்களாக அரசியல் பிரதிநிதிகள் இருக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது எனவும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## நவம்பர் 13 பட்ஜெட்: 26 நாட்களுக்கு விவாதம்

அதற்கு முன்னர், பாராளுமன்றம் நவம்பர் 7 முதல் 10 வரை கூடும் என பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் 2023 ஒக்டோபர் 19ஆம் திகதி பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு கூடிய போதே இது தொடர்பில் இணக்கம் காணப்பட்டது. வரவு-செலவுத் திட்ட விவாதம்

எதிர்வரும் நவம்பர் 13ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால், 2024ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை இரண்டாம் மதிப்பீடு எனப்படும் 'வரவு-செலவுத் திட்ட உரை' பாராளுமன்றத்துக்கு முன்வைக்கப்படவுள்ளது. அதன்பின்னர், நவம்பர் 14 முதல் 21 வரை ஞாயிறு தினங்கள் தவிர்ந்து 7 நாட்கள் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் (வரவு-செலவுத் திட்ட) இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெறவுள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

# "பொருளாதார வளர்ச்சி +7"

கொழும்பு தாமரைத் தடாக அரங்கத்தில் புதன்கிழமை (01) இடம்பெற்ற தொழிற்சாலைகளுக்கான, தேசிய கைத்தொழில் விருது விழா - 2023 இல் கலந்துகொண்டிருந்த போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"வற்" வரியை 18% அதிகரிப்பதற்கான தீர்மானத்தை தானோ அல்லது அமைச்சரவையோ விருப்பத்துடன் மேற்கொள்ளவில்லை என்றும், நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை பேணுவதற்காகவே அந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, மக்களுக்கு உண்மையை கூறி நாட்டுக்கான தீர்மானங்களை மேற்கொள்வதே தலைமைத்துவப் பண்பாகும் என்றும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தேர்தல் நெருங்கி வரும் தறுவாயில் கடினமான தீர்மானங்களை மேற்கொள்வது பாராளுமன்றத்திற்கு மேலும் நெருக்கடியாக அமையும் என்றும் தெரிவித்தார்.

நாட்டுக்கான தீர்மானங்களை எடுப்பதற்கு இளைஞர் தலைமைத்துவமும் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்றும், நாட்டிற்காக சேவையாற்றக்கூடிய இளம் அமைச்சர்கள் குழுவினர் அரசாங்கத்தில் செயற்பட்டு வருவதாகவும், அவர்களுடன் இணைந்து 2024ஆம் ஆண்டளவில் சுமூகமான பொருளாதார நிலைமையொன்றை உருவாக்க முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

அடுத்த வரவு -செலவுத் திட்டத்தில், சிறு மற்றும் மத்திய தர கைத் தொழிலாளர்களுக்கான வங்கிக் கடன் சலுகை தொடர்பில் அறிவிக்க எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்றுமதி சார்ந்த உற்பத்திகளை வலுவூட்டுவதற்காக, கைத்தொழில் அமைச்சும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இணைந்து 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய கைத்தொழில் விழாவை ஏற்பாடு செய்துள்ளன.

இதற்காக, 21 பிரதான தொழில் துறைகள் மற்றும் 61 உப தொழில் துறைகளை சேர்ந்த 4000க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்கள் விண்ணப்பித்திருந்த நிலையில் அவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்த 300 தொழில்முனைவோருக்கு பிளாட்டினம் தங்க விருதுகளும், வெள்ளி மற்றும் வெண்கல விருதுகள் வழங்கப்பட்டன.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில்,

கடந்த வருடத்தில் இந்தத் தொழில்களை முன்னெடுத்துச் செல்ல முடியுமா என்ற கேள்விக்குறி காணப்பட்டது. மின்சாரம் இல்லாமை மற்றும் வங்கிக் கடன் பெற முடியாத நிலை காரணமாக ஆயிரக்கணக்கான வியாபாரங்கள் கைவிடப்பட்டன.

இன்று எதிர்பாராத வகையில் பெருமளவானவர்கள் தங்கள் தொழில்களில் மீண்டும் ஈடுபட்டு வெற்றிகரமாக முன்னோக்கிச் செல்கிறார்கள். சிறு மற்றும் மத்தியத் தர தொழிற்சாலைகள் பலவும் குறுகிய காலத்தில் மீண்டும் வளர்ச்சியடைந்துள்ளன. இருப்பினும் சில பிரச்சனைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. வங்கிக் கடன், சந்தை வாய்ப்பு போன்ற பிரச்சினைகள் தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில், சிறு மற்றும் மத்திய தர கைத்தொழிலாளர்களுக்கான வங்கிக் கடன் சலுகை தொடர்பில் அறிவிக்க எதிர்பார்த்திருப்பதோடு, அந்த செயற்பாடுகளை படிப்படியாக முன்னெடுத்துச் செல்ல இருக்கிறோம்.

சரிவடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் திட்டத்தை நாம் வகுத்துள்ளோம். அதுகுறித்து சர்வதேச நாணய நிதியத்துடனும் கடன் வழங்குநர்களுடனும் பேச்சுவார்த்தைகளையும் நடத்தியுள்ளோம். பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தும் இயலுமை நம்மிடம் இருக்கிறதா என்பது தொடர்பிலேயே அனைத்து சந்தர்ப்பங்களிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதற்காக எமது வருடாந்த வருமானத்தையும் அதிகரித்துக்கொள்ள வேண்டும். கடன்களை திருப்பிச் செலுத்த முடியும் என்ற நம்பிக்கையை அனைத்து தனியார் கடன் வழங்குநர்கள் மற்றும் பலதரப்பு கடன் வழங்குநர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். அந்த நம்பிக்கை இல்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரம் சரிவடையும்.

கடன் மற்றும் வட்டியை செலுத்துவதற்கான ஒதுக்கீடுகளை அடுத்த வரவு- செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளவிருக்கிறோம். கடனை செலுத்தாதிருந்தால் நாம் மீண்டும் பழைய நிலைக்குச் செல்வோம். எமது ரூபாவின் தரத்தையும் பேணிக்கொண்டு கடன்களை செலுத்த வேண்டும்.

கடந்த காலங்களில் வரவு - செலவுத் திட்டத்திற்கு தேவையான நிதி இல்லாத போது மத்திய வங்கியில் பணம் அச்சிடப்பட்டது. ஆனால், இப்போது அதை செய்ய முடியாதென சட்ட ரீதியாகவே தடை போடப்பட்டுள்ளது. வங்கிக் கடன்களையும் பெற முடியாது. கடந்த காலங்களின் காணப்பட்ட முறையற்ற நிதிச் செயற்பாடுகளே அதற்கு காரணமாகும். அடுத்த வருடத்தில் வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும். அதற்குரிய இலக்குகளை நோக்கி பயணிக்க வேண்டும்.

அடுத்த வருடத்திலும் நாடு வங்குரோத்தடையாமல் முன்னோக்கிச் செல்ல வேண்டுமெனில் நாம் வருமானத்தைத் தேட வேண்டும். அதற்காகவே "வற்" வரி 18% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இருந்த நிலைக்கு நாம் தள்ளப்படுவோம். இது எந்தவோர் அரசாங்கத்திற்கும் கடினமான நிலைமையாகும் என்றார்.

## "டிஜிட்டல் மயமாக்கப்பட்டால்...

தற்போதைய அரசாங்கம் 3 ஆவது முறையாக மின் கட்டணத்தை அதிகரித்து இந்நாட்டிலுள்ள இலட்சக்கணக்கான மின் பாவனையாளர்களை நெருக்கடிக்கு ஆளாக்கியுள்ள வேளையில் பெறுமதி சேர் வரி 18 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், இது ஓர் பிற்போக்குத்தனமான வரி விதிப்பு என்றும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொருவரும் தங்கள் வருமானத்தைப் பொருட்படுத்தாமல் ஒரே அளவிலான வரியைச் செலுத்த வேண்டும் என்பதால்,இது கீழ்த்தரமான செயல் என்றும், இவ்வாறு அலசும்போது பல்வேறு தரப்பினரும் மாற்றுத் தீர்வுகள் கேட்டு விமர்சிக்கின்றனர் என்றும், அவர்கள் விரும்பும் மாற்றுத் தீர்வுகள் குறித்து விளக்கமளிக்க தாம் தயார் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்கும் நபர்களிடமிருந்து முறையாக வரி அறவிடப்பட வேண்டும் என்றும் வரி செலுத்தாதோரிடமிருந்தும் முறையாக வறி அறவிடப்பட வேண்டும் என்றும் ஊழல் முறைகளில் அரச சார்பு நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் தேவையற்ற வரிச் சலுகைகளும் நீக்கப்பட வேண்டும் என்றும் இந்த நிறுவனங்களுக்கு தேவையில்லாமல் வழங்கப்பட்ட வரிச்சலுகைகளால் நாட்டுக்கு எந்தப் பலனும் இல்லை என்றும் இம் முறைகள் மூலம் VAT ஐ அதிகரிக்காமல் அரசின் வருவாயை அதிகரிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ் நுங்கமுவ, தம்பதெனிய தம்சென் மத்திய கல்லூரிக்கு 41 ஆவது கட்டமாக ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் இன்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், வரி மூலம் 100 பில்லியன் கிடைக்கும் என அரசாங்கம் எதிர்பார்த்தாலும் அது இதுவரை 107 பில்லியனாக அதிகரித்துள்ளதாகவும், இது ஆண்டு இறுதிக்குள் 125 பில்லியனாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் தனால், இது தவறான வரிக் கொள்கை எனவும் சரியான வரி சூத்திரத்தை உருவாக்க அரசாங்கத்தால் முடியவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்த அதிக வரிச்சுமையால் புத்திஜீவிகள் வெளியேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் புத்திஜீவிகள் வெளியேற்றம் ஏற்படும்போது பொருளாதார வளர்ச்சி ஏற்படாது என்றும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் பொருளாதாரச் சுருக்கத்தை ஏற்படுத்தினாலும் பொருளாதார விரிவாக்கமே இடம்பெற வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

என் வாயை யாராலும் மூட முடியாது. நாட்டில் நடக்கும் விடயங்களை மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## இலங்கை-இந்தியாவுக்கு இடையில் மீண்டும் பேச்சு

இதில் நாட்டின் பிரதான ஏற்றுமதிச் சந்தைகளைப் பாதுகாத்து ஊக்குவிப்பதன் மூலம் ஏற்றுமதி பல்வகைப்படுத்தலுக்கு ஆசியா மற்றும் கிழக்கு ஆசியாவிலுள்ள மிகப்பெரிய பொருளாதாரங்களுடன் இணைவதே இலங்கை அரசாங்கத்தின் நோக்கமாகும். இந்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் உலக பெறுமதிச் சங்கிலியின் ஊடாக பிரதான தரப்பினர்களுடன் இணைவதே தற்போதைய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதார கூட்டுறவானது வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகிய இரு நாடுகளினதும் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததாகும்.

முன்னுரிமையான துறைகளில் இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை விரிவாக மேம்படுத்தும் நோக்கத்துடன் 2018 முதல் இடைநிறுத்தப்பட்ட ETCA தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க , ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 29 ஜூலை 2023 அன்று இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயத்தின் போது, இரு நாட்டுத் தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

## 485 பேருக்கு எச்.ஐ.வி தொற்று

'இலங்கையில் இந்த ஆண்டு 4,100 எச்.ஐ.வி நோய்த்தொற்று இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் செப்டம்பர் இறுதி வரை, 485 புதிய எச்.ஐ.வி நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது ஒரு அதிகரிப்பாக நாங்கள் பார்க்கிறோம். அரச மற்றும் அரச சாரா நிறுவனங்களுடனான ஒத்துழைப்புடன் எச்.ஐ.வி பரிசோதனைகள் அதிகளவில் நடத்தப்பட்டன. இவர்களில் 80% ஆண்களே பதிவாகியுள்ளனர். எச்.ஐ.வி தொற்று 15-49 வயதிற்கு இடையிலானவர்கள் மத்தியிலேயே அதிகளவில் காணப்படுகிறது' என தெரிவித்தார்.

## ஒரே விலையில் தேயிலை உரம்

தேயிலை செய்கைக்கு தேவையான உரத்தை சலுகை விலையில் வழங்குமாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் தேயிலை உற்பத்தியாளர்களின் சுயாதீன ஒன்றியம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேயிலை, இலவங்கப்பட்டை, தென்னை உள்ளிட்ட பெருந்தோட்டப் பயிர்களுக்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான லங்கா உரக் கம்பனியும் வர்த்தக உரக் கம்பனியும் தற்போது விசேட கலப்பு உரத்தை உற்பத்தி செய்து வருகின்றன. இந்த உரமானது தேயிலை பயிர்ச்செய்கைக்கு மிகவும் ஏற்றது எனவும், தேயிலை கைத்தொழிலுக்கு மானிய விலையில் உரம் வழங்குவது தொடர்பாக அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களின் தலைவர் கலாநிதி ஜகத் பெரேராவுடன் அமைச்சர் கலந்துரையாடினார்.

## "அம்பிட்டியவின் செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ளவே முடியாது"

மூன்று தசாப்த கால போர் இடம்பெற்ற காலத்தில் வாழ்ந்த அந்தப் பிரதேச மக்களது குரல்களுக்கு அரசாங்கமும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் தரப்பினரும் உரிய முறையில் செவிசாய்க்கவில்லை என்று தென்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு பௌத்தப் பிக்குவின் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அந்தப் பகுதி மக்களின் பிரச்சினைகளைத் தீர்மானிக்க வேண்டாம் என அவர் தெரிவித்துள்ளார்.

அம்பிட்டியே சுமனரத்ன தேரரின் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் அவரும் அவர் சார்ந்த சமூகமும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் காரணமாக அவர் அவ்வாறு செயல்பட்டு வருவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த பிரச்சினைக்கு தற்போது அரசாங்கம் மட்டும் காரணம் அல்ல எனவும் கடந்த கால அரசாங்கங்களும் இந்த பிரச்சினையை கருத்தில் கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

## தலைமன்னாரில் துறைமுக அறிவிப்பு

எதிர்வரும் நாட்களில் இதற்கான வர்த்தமானி வெளியிடப்படவுள்ளதாக கப்பற்றுறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ்.ருவன் சந்திர தெரிவித்தார்.

இந்தியாவின் இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதே இதன் நோக்கமாகும்.

இந்தக் கப்பல் சேவையை இலாப மீட்டும் செயற்றிட்டமாக மாற்றுவது தொடர்பில் கலந்துரையாடப்படுவதாகவும் கப்பற்றுறை மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சின் செயலாளர் ருவன் சந்திர கூறினார்.

துறைமுகமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் தலைமன்னாரின் உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துவதற்கு அதிக வாய்ப்புகள் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

## "அகதிகள் முகாம் மீதான தாக்குதல் போர்க்குற்றத்துக்கு சமமானது"

ஆனால், அதை திட்டவட்டமாக நிராகரித்த இஸ்ரேல், ஹமாஸ் போராளிகளை முழுமையாக ஒழிக்கும் வரை ஓயமாட்டோம் என சபதம் செய்து போரை தொடர்ந்து வருகின்றது.

காசா முனையில் அகதிகள் அதிகம் வசிக்கும் முகாம் மீது இஸ்ரேல் விமானப்படை தாக்குதல் நடத்தியதாகவும், அதில் 50 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. எனவே, ஹமாஸ் போராளிகளின் சார்பில் வெளியிடப்பட்ட தகவலின்படி, 195 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாகவும், 777 பேர் காயமடைந்துள்ளதாகவும், 120-க்கும் அதிகமானோர் இடிபாடுகளில் சிக்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் 'எக்ஸ்' வலைத்தள பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில்,

'அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் உயிரிழந்ததையும், அங்கு ஏற்பட்டுள்ள அழிவின் அளவையும் கருத்தில் கொண்டு, இவை போர்க்குற்றங்களுக்கு சமமான தாக்குதல்கள் என கருதுகிறோம்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீனத் தூதுவர் யாழ். விஜயம்

சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் நலனோம்புத் திட்டங்களை சீன தூதுவர் நேரில் சென்று பார்வையிடத் திட்டமிட்டிருப்பதாகச் சீனத் தூதரக வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது.

இதேநேரம், இலங்கைக்கான சீனத் தூதுவர் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 50 பேருக்கு மாதாந்தம் ரூபா 6,500 படி வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், சீனத் தூதுவரின் யாழ்ப்பாண விஜயத்துக்கான நிகழ்ச்சி நிரலில் யாழ். பல்கலைக்கழக விஜயம் தவிர்க்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

# கருவாடு உற்பத்தி அதிகரிப்பு


ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் என்றுமில்லாதவாறு அதிகளவிலான கடல் மீன்கள் பிடிபடுவதாவல் மீன்களின் விலைகள் குறைவடைந்துள்ளன.

அதிகளவிலான கீரி மற்றும் அறுக்களா, பாரை மீன்கள் பிடிக்கப்படுவதால் மிகக்குறைந்த விலையில் பொதுமக்கள் மீன்களை கொள்வனவு செய்து வருகின்றனர்.

3000 ரூபாய் வரை விற்பனையான ஒரு கிலோ அறுக்களா மற்றும் பாரை மீன்கள் தற்போது ஒரு கிலோ 1000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. 600 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கீரி மீன் 200 ரூபாயாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.





## இனி மாதாந்த நீர்க் கட்டண சீட்டு வழங்கப்படாது

மு.தமிழ்ச்செல்வன்வ

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பாவனையாளர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வந்த நீர் கட்டணச் சிட்டை நவம்பர் மாதம் (01.11.2023) தொடக்கம் வழங்கப்படமாட்டாது எனவும் அதற்கு பதிலாக குறுந்தகவல் (SMS) மற்றும் மின்னஞ்சல் (e.Bill) ஊடாகவே மாதாந்த நீர்க் கட்டண விபரங்கள் பாவனையாளர்களுக்கு அனுப்பப்படும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

சுற்றுச் சூழல் நன்மை, செலவுகளைக் குறைத்தல், தொழிநுட்ப வசதிகளை பயன்படுத்தல் போன்ற காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதன்படி, பாவனையாளர்களுக்கு தொலைபேசி மூலம் கட்டணங்களைச் செலுத்திக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், நீர்ப் பாவனையாளர்கள் தங்களின் தொலைபேசி இலக்கம் அல்லது மின்னஞ்சல் முகவரிகளைச் சரியாக பதிவு செய்து கொள்ளாதவர்கள் நீர்மானி வாசிப்பாளர்கள் சமூகம் தருகின்றபோது அவர்களுடன் தொடர்பு பதிவு செய்துகொள்ள முடியும் என்றும் கூறியுள்ளார்.

அத்துடன், இது தொடர்பில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் 1939 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவித்துள்ளார்.




## தரமற்ற உணவில் விலை அதிகம்; மக்கள் விடுத்துள்ள கோரிக்கை

செ.தி.பெருமாள்

மலையகத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் வழியில் தேநீர் அருந்துவதற்காக நிறுத்தப்படும் ஹோட்டல்களில் தரமற்ற உணவுகள் அதிக விலையில் விற்பனை செய்வதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஹட்டனில் மற்றும் டயகம, நுவரெலியா, தலவாக்கலை, பொகவந்தலாவ, சாமிமலை, மஸ்கெலியா பகுதிகளில் இருந்து கொழும்பு செல்லும் தனியார் மற்றும் அரச பேருந்துகள் தேநீர் அருந்துவதற்காக கித்துல்ஹல, மற்றும் தெஹியோவிற்ற என்ற இரண்டு ஹோட்டல்களில் எதாவது ஒரு ஹோட்டலில் நிறுத்துவது வழக்கமாகும்.

இந்நிலையில், குறிப்பிட்ட இரு ஹோட்டல்களிலும் தரமற்ற உணவுகளே அதிக விலையில் விற்பனை செய்வதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதன்படி, மரக்கரி உணவு 300/=. முதல் 350/=கும் தேநீர் 50/=, பால் தேநீர் 120/=. ஏனைய சிற்றுண்டிகள் 100.120.150 என விற்பனை செய்யப்படுவதாகவும் சாரதி மற்றும் நடத்துனர்களுக்கு விசேட கவனிப்பு கிடைப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் நலன் கருதி இவ்வாறு செயல் படுவதைத் தவிர்க்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கணவனின் அந்தரங்க உறுப்பை வெட்டிய மனைவி



இராணுவ வீரரான தன்னுடைய கணவனின் அந்தரங்க உறுப்பை வெட்டி பலத்த காயங்களை ஏற்படுத்தினார் என்றக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அவரது மனைவி 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அனுராதபுர பிரதான நீதவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதவானுமாகிய நாலக சஞ்ஜீவ ஜயசூரியவே இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபரான பெண்ணை அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் மனநல வைத்தியரிடம் முன்னிலைப்படுத்துமாறும், உரிய மருத்துவ அறிக்கையை எதிர்வரும் 17ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் பிரதான நீதவான் பொலிஸாருக்கு மேலும் உத்தரவிட்டுள்ளார்.

பகலில் தனது கணவர் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தபோது மனைவி அவரது ஆணுறுப்பை கத்தியால் அறுத்தால் பலத்த காயம் அடைந்துள்ளார். அவரை 1990 சுவாசரி அம்பியூலன்சில் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பொலன்னறுவை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

## யாழில் போராட்டம்




எம்.றொசாந்த்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களினால், வியாழக்கிழமை (02) பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இப் போராட்டத்தின் போது சம்பளப் பிரச்சினைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் நிதியில் உள்ள குறைவு போன்ற பல கோரிக்கைகளை முன்வைக்கப்பட்டுள்ளன.

## நகை மற்றும் பணம் திருட்டு

பு.கஜிந்தன்

யாழ். வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தங்கேணி பகுதியில் உள்ள வீடொன்றில் 6 பவுண் நகை மற்றும் 30,000 ரூபா பணம் என்பன திருடப்பட்ட சம்பவம் புதன்கிழமை (01) இடம்பெற்றுள்ளது.

சித்தங்கேணியில் பகுதியில், வயதான இருவர் வசித்து வந்த வீட்டில் அதிகாலை 02 மணி அளவில் வீட்டிற்குள் புகைக்கூட்டினூடாக உள்நுழைந்த இருவர் இவ்வாறு கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கால்நடை பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டம்

ஆர்.ஜெயஸ்ரீராம்




மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை கால்நடை பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டம் 49ஆவது நாளாக சித்தாண்டியில் தொடர்கிறது.

பண்ணையாளர்களும்,கால்நடைகளும் நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் அநீதிக்கு எதிராக நீதி வேண்டி இவ் சுழற்சி முறை போராட்டம் இடம்பெற்று வருகிறது.

இதற்கு வலு சேர்க்கும் முகமாக வியாழக்கிழமை (02) கிழக்கு பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீட தமிழ் மாணவர்கள், போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அவர்களது நீண்ட கால மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு பெற்றுத் தருமாறு அரசிற்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிழக்கு பல்கலைக் கழக முன்றலில் ஒன்று கூடிய மாணவர்கள் கோஷங்களை எழுப்பியவாறு பதாதைகளை ஏந்தியவாறும் பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டம் நடைபெறும் இடத்திற்கு ஊர்வலமாக வந்து அவர்களுடன் இணைந்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



## கிழக்கு பிரதம செயலாளர் கல்முனைக்கு விஜயம்

ஏ.எஸ்.மௌலானா

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்னாயக்க புதன்கிழமை (01) கல்முனை மாநகர சபைக்கு திடீர் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதன்போது, மாநகர சபையின் நிர்வாக செயற்பாடுகள் குறித்து நேரடியாக கண்டறிந்து கொண்ட பிரதம செயலாளர், அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

இக்கலந்துரையாடலில் மாநகர சபையில் நிலவும் குறைபாடுகள் மற்றும் தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டுள்ளதுடன், கல்முனை மாநகர சபையின் அண்மைக்கால முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

## நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தும்




தென்கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஒரு நாள் அடையாள பணிப்பகிஷ்கரிப்பிலும், கவனயீர்ப்பு போராட்டத்திலும் வியாழக்கிழமை (02) ஒலுவில் பல்கலைக்கழக வளாக பிரதான நுழைவாயிலுக்கு முன்னால் ஈடுபட்டுள்ளனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் செல்வதால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டு இலவச கல்வி நோக்கம் எதிர்காலத்தில் இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளதாக, தென்கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தெரிவித்துள்ளார்.

சம்பளப் பிரச்சினைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் நிதிக் குறைப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் 17 அரச பல்கலைக்கழகங்களும் வியாழக்கிழமை (02) அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

அரச சேவை தொழிற்சங்கக் கூட்டமைப்பு மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் (FUTA) புதன்கிழமை (01) நாவலயிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக வளாகத்தில் நடத்திய கூட்டத்தைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தொழில் நிபுணர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு பேரணி ஒன்று கொழும்பில் நடைபெற்றது. PAYE வரிவிதிப்பு மற்றும் அரசாங்கத்தின் தன்னிச்சையான வரிக் கொள்கை ஆகியவற்றில் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்துவதே இந்த அணிவகுப்பின் நோக்கமாகும்.

## தந்தை அடித்ததால் உயிரை மாய்த்துகொண்ட சிறுமி

செ.தி .பெருமாள்



சிறுமியின் தந்தை அடித்ததால் மன உளைச்சலுக்குள்ளான சிறுமி ஒருவர் தன் உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவமொன்று தலவாக்கலை பிரதேசத்தில் புதன்கிழமை (01) பதிவாகியுள்ளது.

வட்டகொடை மேல் பிரிவில் வசித்து வந்த ஜீவராஜன் ரதிபிரியா என்ற 15 வயதுடைய பாடசாலை மாணவியே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுமியின் தாய் வேலை நிமித்தமாக வெளியூர் சென்றிருந்த நிலையில், தந்தையின் தாக்குதலால் மன உளைச்சலுக்கு ஆளான சிறுமி உயிரை மாய்த்துக்கொண்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த சிறுமியின் சடலம் நீதவானின் ஸ்தல பரிசோதனையின் பின்னர் பிரேதப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

பிரேதப் பரிசோதனையின் பின்னர் உடலம் சிறுமியின் தந்தை இடம் ஒப்படைக்க உள்ளதாக நுவரெலியா வைத்திய சாலையில் உள்ள சிரேஸ்ட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.



## ஆபத்தான வீதியோர மரங்கள் அகற்றம்

பி.கேதீஸ்

வீதியோரங்களில் காணப்படும் மிக ஆபத்தான மரங்களை வெட்டி அகற்றும் பணிகள் நுவரெலியா பிரதேச சபையால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியின் நானுஓயா பகுதியில் அமைந்துள்ள ஆபத்தான மரங்களை வெட்டி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# அப்பியாச கொப்பிகளுக்கான தள்ளுபடி: விஸ்தரிப்பது அவசியம்

பாடசாலைகளில் இருந்து இடைவிலகியோரின் கவலைகளைக் காதுகொடுத்துக் கேட்டோமெனில், வறுமை, சீருடைய, பாதணிகளை வாங்குவதற்குப் போதியளவில் பணமில்லை, அப்பியாசக் கொப்பிகளை வாங்கிக்கொள்ள முடியவில்லை உள்ளிட்ட காரணங்களே பிரதானமாக இருக்கும். ஏனெனில், சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தவர்களால் தங்களுடைய பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்ப முடியாத அளவுக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனிடையே, பெறுமதி சேர் வரி (வற்) 18 சதவீதமான அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. இது நடைமுறைப்படுத்தப்படும்போது, இன்னும் குடும்பச் சுமை கூடும். இதனைத் தாங்கிக்கொள்ளும் சக்தி சாதாரண குடும்ப தலைமைகளுக்கு இல்லை. பொருளாதார நெருக்கடி, கழுத்தை இறுக்கிக்கொண்டிருக்கின்றது. இதனால் குடும்பத்துக்குள் பாரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குடும்பச் சண்டையும்பிரதானமானதாக அமைந்துள்ளது.

பண்டிகையைக் கவனத்தில் கொண்டு, சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் ஓரளவுக்குக் குறைக்கப்பட்டாலும் அவை, சதொசவின் சகல கிளைகளிலும் கிடைப்பதில்லை. இதனிடையே சீனிக்கான தீர்வை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், ஒருவேளை உணவாகத் தேநீரைப் பருகும் நபர்களும், பேக்கரி உற்பத்தி பொருட்களை உட்கொள்வோரும் மற்றுமொரு நெருக்கடிக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

சாதாரண தொழில் செய்வோர், தங்களுக்குக் கிடைக்கும் பணத்தில் குடும்பத்துக்குத் தேவையான உணவுப் பொருட்களைப் போதியளவில் கொள்வனவு செய்துகொள்ள முடியாத நிலைமையில் இருக்கின்றனர். இதற்கிடையே பாடசாலைக்குத் தேவையான அப்பியாச கொப்பிகள் உள்ளிட்ட உபகரணங்களைக் கொள்வனவு செய்வதில் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். கொரோனாவுக்குப் பின்னர், அப்பியாச கொப்பிகளில் விலைகள் கடுமையாக அதிகரித்துள்ளன. கடதாசி தட்டுப்பாட்டால் இன்னும் விலைகள் அதிகரித்தன.

இந்நிலையில், பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளை 30 சதவீத தள்ளுபடியில் விற்பனைச் செய்வதற்கு அரச அச்சகம் தீர்மானித்துள்ளது. கல்வியமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவின் ஆலோசனையின் பிரகாரமே இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தை வரவேற்கவேண்டும். எனினும், பாடசாலை அதிபரின் பரிந்துரையைப் பெற்றுக்கொண்டு கொழும்புக்கு வருவது, செலவை இரட்டிப்பாக்கிவிடும்.

நகரங்களுக்கு வெளியே வாழும் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தவர்களே அப்பியாசக் கொப்பிகளைக் கொள்வனவு செய்வதில் கடும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். ஆகையால், கொழும்புக்கு வெளியே நடமாடு சேவைகளை நடத்தினால் பிரயோசமனதாய் இருக்கும். இல்லையேல், பெரும் நகரங்களில் விடுமுறை நாளன்று இன்றேல், வாராந்த சந்தை நடத்தப்படும் தினத்தன்று பெரிய லொறிகளில் அப்பியாசக் கொப்பிகளை ஏற்றிச்சென்று, அந்த தள்ளுபடியில் விற்பனைச் செய்யலாம்.

கல்வியமைச்சினால் முன்னெடுக்கப்படும் இந்த சிறந்த திட்டத்தின் ஊடாக, சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களும் பயன்பெற வேண்டுமாயின், அந்த சேவையை கொழும்புக்கு மட்டுமே மட்டுப்படுத்தி விடாது. மேலே குறிப்பிட்டதைப் போல, நடமாடும் சேவைகளின் ஊடாக, வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வதே சிறந்தது.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

கனவு நிலை அழிந்து போய்விடும். நனவு நிலையே இயற்கையான உண்மை நிலை. கனவுகளில் மட்டும் வாழ முடியாது.

பல அறிஞர்கள் தங்கள் எண்ணங்களை நிஜமாக்கினார்கள். அவை அவர்களின் அறிவினாலும் தொடர் முயற்சியாலும் நிறைவேறின. ஆனால், எந்த முயற்சியையும் செய்யாது, கனவுகளை மட்டும் நம்பி வாழ்பவர்களை என்ன செய்வது?

நிழல் எப்படி நிஜமாகும்? எங்களின் நிழல்கூட சிறிது அசைந்தால் மாறிவிடுகின்றது. இருட்டில் ஏது நிழல்? ஒவ்வொரு நாளும் பற்பல கனவுகள், போகாத இடங்களில் பயணம் செய்து சுற்றித் திரிகின்றது.


உண்மையில் மனிதன் வாழவேண்டும். இடையிடையே தோன்றி, மறையும் காட்சிகளில் மயங்கக்கூடாது. இதுவும் ஒரு மாயநிலை.

தேவையற்ற நினைகளைத் தூக்கித் தூக்கி எறிக. அதிகமாக ஆசைப்படக் கூடாது. உங்களை நீங்கள் நம்பாமல் எதுமே முழுமையாகாது. நிஜவாழ்க்கையில் புகுவதே சுலபமான முன்னேற்றம்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

கறுப்பு ஜூலையின் நாற்பதாண்டுகளின் பின் 25:

# காலிமுகத்திடல் முதல் திருகோணமலை வரை



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

தனிச்சிங்களச் சட்டம் சட்டமூலமாவதற்கான விவாதம் 1956 ஜூன் மாதம் 5ஆம் திகதி பாராளுமன்றில் நடந்து கொண்டிருந்த வேளையில், தமிழரசுக் கட்சியினர் செல்வநாயகம் தலைமையில் பாராளுமன்றத்திற்கு வெளியே காலிமுகத்திடலில் அமைதிவழி சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். தனிச்சிங்களம் சட்டமூலம் சட்டமாவதைத் தடுக்கும் வலிமை தமிழரசுக் கட்சியினருக்கு இருக்கவில்லை. மக்களை ஒன்றுதிரட்டிப் போராடுகின்ற மரபு மேட்டுக்குடி தமிழ்த்தலைமைகளுக்கு இருக்கவில்லை. எனவே, கையறுநிலையிலான ஒரு நடவடிக்கையாகவே இந்த சத்தியாகிரகம் நடந்தது.

சிங்கள மட்டுமே என்ற சட்டமூலத்திற்கான அதிதீவிர சிங்களத் தேசியவாதிகளின் ஏகோபித்த ஆதரவு குறித்து தமிழரசு கட்சியோ அதன் தலைமையில் இருந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகமோ சிந்திக்கவில்லை.

இந்த சத்தியாகிரகத்தின் மீது வன்முறை ஏவப்படலாம் அல்லது குழப்பம் விளைவிக்கப்படலாம் என்பது எதிர்பார்க்கப்படவேண்டியதொன்றே. ஆனால், அது குறித்த அக்கறையற்றே தமிழரசுக் கட்சியினர் காலிமுகத்திடலில் போய் அமர்ந்தனர்.

அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பில் இலங்கை பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் ஜேம்ஸ் மனோர் *Sri Lanka in Change and Crisis* என்ற தனது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பல வாரங்களாக இந்த சட்டமூலத்திற்கு எதிரான உணர்வைத் தூண்டினர், ஜூன் 5 அன்று, அது பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் நாளில், தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளில் ஒரு முழுமையான 'ஹர்த்தால்' நடத்தப்பட்டது. குறித்த திகதிக்கு முதல் நாள் செல்வநாயகம் பண்டாரநாயக்கவுக்கு கடிதம் ஒன்றை எழுதினார். அக்கடிதம் வருமாறு: 'எங்கள் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமார் 200 சத்தியாகிரகிகளைப் பிரதிநிதிகள் சபையின் மேற்கு நுழைவாயிலின் படிக்கட்டுகளில் உட்கார வைப்பார்கள், அங்கு அவர்கள் நாள் முழுவதும் உண்ணாவிரதம் இருப்பார்கள். சத்தியாகிரகிகளுக்கு இடையூறு ஏற்படாமல் இருக்க உங்கள் ஒத்துழைப்பைக் கேட்டு நான் உங்களுக்கு இதை எழுதுகிறேன்'.

ஜூன் 5 அன்று, பாராளுமன்றத்திற்குள் நுழைய மறுக்கப்பட்ட தமிழ் சத்தியாகிரகிகள், வேலிகளால் சுற்றி வளைக்கப்பட்டு, காவல்துறையினரால் பாதுகாக்கப்பட்டு, அருகில் உள்ளிருப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர், இது அவர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுவதற்கு வழிவகுத்தது மற்றும் கலவரத்தை அடையாளம் காட்டியது. காலி முகத்திடலில் நடைபெற்ற இந்த சத்தியாகிரக பேரணியில் முன்னணி அரசியல்வாதிகள் உட்பட சுமார் 200 தமிழ் எதிர்ப்பாளர்கள் கலந்துகொண்டனர். சிங்களக் கூட்டம் ஒன்று திரண்டது, சத்தியாகிரகத்தில் கலந்துகொண்ட பல தமிழ்த் தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் உடல்ரீதியாகக் காயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதற்கிடையில், சிறிய சிங்களக் குழுக்கள் நகரத்தில் சுற்றித் திரிந்தன, கடைகளைச் சூறையாடி சில வாகனங்களை அழித்தன. மறுநாள் காலை, பெட்டா கடைவீதியில் இன்னும் தீவிரமான கொள்ளைகள் நிகழ்த்தப்பட்டன. இரண்டு நாட்களில் ஏற்பட்ட சேதங்களின் உத்தியோகபூர்வ மதிப்பீடுகள் 87 நபர்களுக்குக் காயங்கள் மற்றும் 43 கடைகள் சூறையாடப்பட்டுள்ளன. 113 பேர் கைது செய்யப்பட்டனர்.

சுதந்திர இலங்கையில், தமிழர்கள் மீது வன்முறை ஏவப்படலாம் என்பதைக் கோடு காட்டிய முதலாவது சம்பவம் இது. இதற்கு முன்னரும் இதற்கான வாய்ப்புகள் இருந்தபோதும் சிங்களப் பெருந்தேசியவாதத்தால் வன்முறையை ஏவும் துணிவு இருக்கவில்லை. ஆனால் செல்வநாயகம் திட்டமிடாத சத்தியாகிரக நடவடிக்கையால் இதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார். தமிழர்கள் மீது காலிமுகத்திடலில் ஏவப்பட்ட வன்முறையானது பரவி கிழக்கின் கல்லோயா குடியேற்றத் திட்டத்தில் மோசமாக அரங்கேறியது. கல்லோயாவில் குடியேறிய சிங்களக் காடையர்களால் 150 தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்.

இங்கு எழுகின்ற முக்கிய கேள்வி யாதெனில் தலைநகர் கொழும்பில் நடந்த வன்முறை ஏன் கிழக்கு மாகாணத்தில் எதிரொலித்தது. கிழக்கு மாகாணத்தில் உத்தியோகபூர்வ மொழி சர்ச்சைக்கும் இனக்கலவரத்திற்கும் என்ன தொடர்பு. கலவரம் ஏன் மேற்குக் கரையோரத்தில் உள்ள நகர்ப்புற கொழும்பில் இருந்து கல் ஓயாவுக்குத் தாவியது. இதற்கான பதில் பரபரப்பான அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் விவசாயிகளின் மீள்குடியேற்றம் ஆகியவற்றில் தங்கியுள்ளது. இந்த நேரத்தில், மொழிப் பிரச்சினை தீவின் மக்கள் தொகை குறைவாக உள்ள பகுதிகளில் விவசாயிகள் மீள்குடியேற்றம் என்ற அரசாங்கத்தின் கொள்கையுடன் பின்னிப்பிணைந்துள்ளது. முதல் பிரச்சினை தமிழர்களின் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் தாக்கங்களை ஏற்படுத்தி கட்டுப்படுத்துகிறார்கள் என்ற எண்ணம். இரண்டாவது பிரச்சினை கிழக்கு மாகாணத்தில் சிங்கள மற்றும் தமிழ் (மற்றும் முஸ்லிம்) இன விகிதாச்சாரத்தில் மக்கள்தொகை மாற்றங்களை ஏற்படுத்துவதன் அவசியத்தை சிங்களத் தேசியவாதம் முன்னிறுத்தி வந்த நிலையில் முரண்பாடுகள் தவிர்க்கவியலாதனவாயின.

காலிமுகத்திடல் வன்முறைக்குப் பின்னர்,

> **சிங்களப் பெருந்தேசியவாதத்தால் வன்முறையை ஏவும் துணிவு இருக்கவில்லை. ஆனால் செல்வநாயகம் திட்டமிடாத சத்தியாகிரக நடவடிக்கையால் இதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்**

தமிழரசுக் கட்சி சிங்களம் மட்டுமே சட்டத்தை எதிர்த்துத் தமிழ் மக்களை அணி திரட்டி 'சாத்வீகப் போராட்டம்' நடத்தப் போவதாக அறிவித்தது. சிங்களம் அரச கரும மொழியான பின்பு தமிழரசுக்கட்சி திருகோணமலையில் 1957இல் நடத்திய மாநாடு முக்கியமானது. தமிழர்கள் பெருமளவில் இம்மாநாட்டில் திரண்டனர். சிங்களம் மட்டுமே சட்டமே ஏற்படுத்திய நெருக்கடியும், தமிழர்கள் மீது ஏவப்பட்ட வன்முறையால் ஏற்பட்ட கோபமும் இதற்கு முக்கிய காரணியாகின. சிங்களம் மட்டுமே என்பதற்கு எதிரான உணர்வுடன் திரண்ட இக்கூட்டம் மொழி உணர்வாலும் இன உணர்வாலும் உந்தப்பட்ட பலரையும் கவர்ந்தது. தமிழ் பேசும் மக்கள் என்று தமிழரசு தலைமை கூறுகிற மக்களில் மலையகத் தமிழர் அங்கு திரளாவிட்டாலும், முஸ்லிம்கள் கணிசமான அளவில் பங்கு பற்றினர். அ.அமிர்தலிங்கம், செ.இராசதுரை, மஷூர் மௌலானா ஆகியோரது உரைகள் பொது மக்களால் ரசிக்கப்பட்டன.

தமிழ் மக்கள் இனியும் பொறுமை காக்க மாட்டார்கள். தமிழர்களை இனியும் யாரும் அடக்கியாள முடியாது என்ற விதமாக உரைகள் அடைந்தது. இந்த மாநாடு தமிழர்களுக்கு மிகப்பெரிய நம்பிக்கையை அளித்தது. தமிழரின் 'அப்புக்காத்து அரசியல்' தமிழருக்கான சம உரிமையை உறுதி செய்யும் என்று மக்கள் நம்பினர். 'திருமலைக்குச் செல்லுவோம். தமிழின் உரிமை வெல்லுவோம்', 'அறப்போர் தொடுப்போம்' என்ற விதமான கோஷங்களுடன் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து கால்நடையாகவே மாநாட்டுக்கு வந்தவர்கள் பலர். இது இம்மாநாடு எவ்வாறு மக்களை உணர்வுபூர்வமாக ஒன்றிணைத்தது என்பதற்கான ஒரு சான்று மட்டுமே.

ஆனால், இம்மாநாடு தமிழரசுக் கட்சியிடம் உரிமைகளை வெல்வதற்கான திட்டங்களையோ போராட்டங்களை நடத்துவதற்கான வேலைமுறைகளையோ கொண்டிருக்கவில்லை என்பதை இந்த மாநாடு தெட்டத் தெளிவாகக் காட்டியது. ஆனால், துரதிஷ்டவசமாக இது பற்றி மக்கள் அன்று அறிந்திருக்கவில்லை.

இந்த மாநாட்டில் தமிழரசுக் கட்சியின் நான்கு பிரதான அரசியற் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

1. மலையக மக்களுக்குப் பூரண குடியுரிமையும், வாக்குரிமையும் வழங்கப்படவேண்டும்.
2. தமிழுக்கும், சிங்களத்துக்கும் சமமான அரச கருமமொழி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.
3. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டும்.
4. வடக்கு, கிழக்கு மாகாணங்கட்கான ஒரு சமஷ்டி ஆட்சி உருவாக்கப்பட வேண்டும்.

இக்கோரிக்கைகளில் ஒரு அடிப்படையான நியாயமிருந்தது. இதை வென்றெடுக்க எவ்வகையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது பற்றிய எவ்விதமான கலந்துரையாடலும் இன்றி வெறும் அரசியற் கோரிக்கைகளோடு இம்மாநாடு முடிவுக்கு வந்தது.

இதில் கவனிப்புக்குள்ளாக வேண்டியது யாதெனில் மலையக மக்கள் சார்பில் பேசுவதற்கான அதிகாரமோ தகுதியோ தமிழரசுக் கட்சிக்கு இருக்கவில்லை. மலையக மக்களின் குடியுரிமையை மையப்படுத்தியே தமிழரசுக் கட்சியின் தோற்றமும் தமிழ்க் காங்கிரசுடனான முரண்பாடும் பொதுவெளியில் இருந்த நிலையில் மாநாடு மலையக மக்கள் சார்பில் பேசுவதை இதயசுத்தியுடனன்றி அரசியல் நோக்கங்களுக்கான முன்வைத்தது. இதில் முரண்நகை யாதெனில் ஜி.ஜீ.பொன்னம்பலம் தோட்ட உரிமையாளராக இருந்தமையாலேயே அவர் குடியுரிமைப் பறிப்புக்கு ஆதரவாக வாக்களித்தார் என்பது தமிழரசுக் கட்சியின் வாதமாகும். ஆனால் செல்வநாயகமும் ஒரு தோட்ட உரிமையாளரே. எனவே மலையக மக்களின் நல நோக்கில் அவர்களது உரிமைக்கான கோரிக்கையைத் தமிழரசுக் கட்சி முன்வைக்கவில்லை என்பது கண்கூடு. பாராளுமன்ற அரசியல் சாக்கடையில் புரள்வதற்கான வழிகளில் மலையகத் தமிழருக்கான குரலும் சாத்வீகப் போராட்டம் என்ற ஏமாற்றும் புதிதாகச் சேர்ந்து கொண்டன.

## கடிதங்கள்

### முதலைகளின் தொல்லை

மாவடிப்பள்ளியை அண்டிய பிரதேசங்களிலும், வயல் பிரதேசங்களிலும் மற்றும் சாய்ந்தமருது கரைவாகு ஆற்றுப் பிரதேசங்களிலும் பகலிலும் இரவிலும் முதலைகளின் தொல்லை அதிகரித்து வருவதால் பிரதேச மக்கள் அச்சத்துடன் வாழ வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் வேறு பிரதேசங்களில் வாழ்ந்த முதலைகள் அண்மையில் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இப்பிரதேசங்களிலுள்ள ஆறுகளிலும் குளங்களிலும் வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

பகல் வேளைகளில் ஆற்று ஓரங்களில் திரியும் முதலைகள், ஆடுகள் மற்றும் கோழிகளைப் பிடித்து உண்பதால் இவற்றை வளர்த்து அதன் மூலம் தமது ஜீவனோபாயத்தை கடத்தும் வறிய மக்கள் பலவிதமான பொருளாதார நஷ்டத்தினை அனுபவித்து வருகின்றனர் .

தற்போது பெரும்போக வேளாண்மை செய்கை ஆரம்பித்துள்ள நிலையில் ஆற்று ஓரங்களிலுள்ள வயல்களில் இரவு வேளைகளில் வயல் நிலங்களிலுள்ள இளம் பயிர்களுக்கு பெரும் சேதத்தை உண்டுபண்ணுவதாக விவசாயிகள்கவலை தெரிவிக்கின்றனர்.

– அஸ்ஹர் இப்றாஹிம்



உலகக் கிண்ணப் போட்டிகளை SLT–MOBITEL PEOTV இல்

# இலவசமாக பார்வையிடும் வசதி

SLTMOBITEL PEOTV | PEOTVGO www.peotvgo.com | ICC MEN'S CRICKET WORLD CUP INDIA 2023

Internet Protocol Television (IPTV) சேவை வழங்குநரான SLT-MOBITEL PEOTV, நாட்டின் கிரிக்கட் ரசிகர்களுக்கு தற்போது இந்தியாவில் நடைபெறும் ICC ஆடவர் உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகள் 2023 ஐ, IPTV மற்றும் OTT கட்டமைப்புகளில் Event TV HD (Ch.No 310) இல் கண்டு களிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. முற்றிலும் high-definition (HD) தரத்தில் ஒளிபரப்பாகும் இந்த போட்டிகளை, Event TV SD (Ch.No 20) இலும் முற்றிலும் இலவசமாக கண்டு களிக்க முடியும். இதனூடாக, நேரலை கிரிக்கட் போட்டிகளை கண்டுகளிக்கும் அனுபவம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

முன்னரை விட கிரிக்கட் போட்டிளுடன் ரசிகர்களை மேலும் நெருக்கமடையச் செய்யும் வகையில், SLT-MOBITEL PEOTVGO இனால் SLT-MOBITEL மொபைல் வாடிக்கையாளர்களுக்கு சகல போட்டிகளையும் மொபைல், டப்லெட், மடிக்கணனி அல்லது கணனியில் எங்கிருந்தும், எந்நேரத்திலும் இலவச UNLIMITED DATA உடன் கண்டு மகிழும் வாய்ப்பு வழங்கப்படுகின்றது. play store / app store இலிருந்து PEOTVGO app ஐ வாடிக்கையாளர்கள் டவுன்லோட் செய்து மற்றும் peotvgo.com எனும் இணையத்தளத்துக்கு விஜயம் செய்து இந்த விசேட சலுகையில் எவ்விதமான மேலதிகக் கட்டணங்களுமின்றி கிரிக்கட் உலகக் கிண்ண போட்டிகளை கண்டு களிக்கலாம்.

இலங்கையில் காணப்படும் முன்னணி IPTV சேவை வழங்குநராக PEOTV திகழ்வதுடன், களிப்பூட்டும் அம்சங்களுக்காக அதன் புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய வழிமுறைகள் போன்றவற்றுக்காக அதிகளவில் அறியப்படுகின்றது. SLT-MOBITEL PEOTV இனால் உலகத் தரம் வாய்ந்த களிப்பூட்டும் மற்றும் தகவல்கள் அடங்கிய விநோத அம்சங்கள் ஒரு மில்லியன் இல்லங்களில் வழங்கப்படுவதுடன், இந்த எண்ணிக்கை அதிகரித்த வண்ணமுள்ளது. PEOTV இனால் மாபெரும் HD அலைவரிசைத் தெரிவுகள் வழங்கப்படுவதுடன், உள்நாட்டு, சர்வதேச அலைவரிசைகளையும் கொண்டுள்ளது. மேலும், ஆங்கிலம், சிங்களம், தமிழ், மலையாளம் மற்றும் இதர மொழிகளில் பெருமளவு திரைப்படங்களையும் கொண்டுள்ளது. மேலும் பார்வையாளர்களுக்கு நேரலை விளையாட்டுகள், விநோத தகவல்கள், களிப்பூட்டும் நிகழ்ச்சிகள், செய்திகள் மற்றும் கல்விசார் நிகழ்ச்சிகளை சகல வயதினருக்கும் பொருந்தும் வகையில் கண்டுகளிக்க முடியும்.

உயர் தரம் வாய்ந்த உள்ளடக்கங்கள் மற்றும் ஒப்பற்ற ஸ்ட்ரீம் செய்யும் அனுபவங்களை வழங்குவதற்கான அர்ப்பணிப்புடன், SLT-MOBITEL PEOTV தொடர்ந்தும், இலங்கையர்கள் தொலைக்காட்சியை கண்டு களிக்கும் முறையில் புதுமைகளுடன் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது.

உலக நீரிழிவு நோய் மாதத்தை முன்னிட்டு

# Suwa Diviyaவிடமிருந்து இலவச வேலைத்திட்டம்

ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் நீரிழிவு விழிப்புணர்வுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இலாப நோக்கற்ற நிறுவனமான Suwa Diviya, உலக நீரிழிவு மாதத்தை முன்னிட்டு 2023 நவம்பர் 4 ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் விசேட பொது நிகழ்ச்சி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. "Unmask Diabetes" எனும் தொனிப்பொருளின் கீழ் இந்த நிகழ்ச்சி நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த திட்டத்தின் நோக்கம் நீரிழிவு நோய், அதன் தடுப்பு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையின் சமூக நோக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதாகும். அன்றைய தினம் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை பொதுமக்களுக்காக இந்த இந்த நிகழ்ச்சி நடைபெறும்.

அன்றைய நிகழ்ச்சியானது நீரிழிவு நோய் தடுப்பு பற்றிய ஒரு கவர்ந்திழுக்கக் கூடிய விளக்கக்காட்சியுடன் தொடங்கும், இதில் பங்கேற்பாளர்கள் நீரிழிவு அபாயத்தைக் குறைக்க எடுக்கக்கூடிய நடைமுறைகள் குறித்த மதிப்புமிக்க நுண்ணறிவைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்நிகழ்ச்சியில் பிரசித்தி பெற்ற உட்சுரப்பியல் நிபுணரான திருமதி. திமுத்து முத்துகுட அவர்கள் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார். நீரிழிவு நோய் குறித்த விரிவான விழிப்புணர்வு அமர்வை அவர் நடத்துவார். இந்த நாட்பட்ட நிலையின் சிக்கல்களை மருத்துவர் முழுமையாக விளக்கி, பங்கேற்பவர்களுக்கு அதைப் பற்றிய சிறந்த புரிதலை வழங்குவார்.



இந்த திட்டத்தில் ஒரு கண் மருத்துவ நிபுணர், சிறுநீரக மருத்துவ நிபுணர், குடும்ப மருத்துவ நிபுணர், ஊட்டச்சத்து நிபுணர் ஆகியோர் அடங்குவர். மேலும் ஒரு உடற்பயிற்சி நிபுணர் உட்பட புகழ்பெற்ற மற்றும் நிபுணர் குழுவும் பங்கேற்கும். இந்த நிபுணர் குழு கேள்வி-பதில் அமர்வில் பங்கேற்கும், அங்கு பங்கேற்பாளர்கள் அவர்களிடம் நேரடியாக கேள்விகளைக் கேட்க முடியும், மதிப்புமிக்க ஆலோசனை மற்றும் அறிவைப் பெற முடியும்.

இந்த அமர்வுகளுக்கு மேலதிகமாக, இதயம் மற்றும் இருதய அமைப்பு மற்றும் நீரிழிவு நோயை நிர்வகிப்பதில் சத்தான உணவின் முக்கியத்துவத்தை மையமாகக் கொண்ட இரண்டு பிரிவுகளையும் உள்ளடக்கியது. பங்கேற்பாளர்களை புத்துணர்ச்சியுடனும் சுறுசுறுப்புடனும் உற்சாகத்துடனும் வைத்திருக்க அன்றைய தினம் ஒரு மெய்நிகர் ஜூம்பா அமர்வு நடைபெறும்.

இது குறித்து கருத்து தெரிவித்த Suwa Diviya நிறுவனத்தின் நிறுவுனர் திருமதி கலாநிதி காயத்ரி பெரியசாமி, "நீரிழிவு நோயைத் தடுப்பதற்கும் திறம்பட நிர்வகிப்பதற்கும் பொதுமக்களுக்கு அறிவு மற்றும் கருவிகளை வழங்குவதே Suwa Diviya எங்கள் குறிக்கோள். உலக நீரிழிவு நோய் மாதத்தின் இந்த நிகழ்ச்சி நமது அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு ஒரு சிறந்த சான்றாகும். நீரிழிவு நோயற்ற எதிர்காலத்திற்காக நீரிழிவு நோயைத் தடுப்பதற்கு விழிப்புணர்வோடு பங்கேற்கவும், செயலூக்கமான நடவடிக்கைகளை எடுக்கவும் நவம்பர் 4 ஆம் திகதி எங்களுடன் சேருமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்." என தெரிவித்தார்.

மேலும், இந்த திட்டம் நீரிழிவு தொடர்பான பல்வேறு தகவல்களையும் தயாரிப்புகளையும் கொண்டுள்ளது. நீரிழிவு நோயாளிகளுக்காக வடிவமைக்கப்பட்ட காலணி, மருந்துப் பொருட்கள், ஊட்டச்சத்து உணவுகள், ஊட்டச்சத்து சப்ளிமெண்ட்ஸ்/பொருட்கள் மற்றும் கண் பரிசோதனைச் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான தயாரிப்புகள் நிகழ்ச்சி வளாகத்தில் உள்ள விற்பனையாளர்களிடமிருந்து, பங்கேற்பாளர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

# மழையே அழாதே

விடியலின் இதந்தரும் குளிர்காற்று
என்னைத் தாலாட்டும்பொழுது
உதயங்களை என்றோ
தொலைத்திட்டேனோ
என்றே உணர்வுகள் மேலெழுகிறது!

மாலை மங்கிய பொழுதுகள் கழிய
நிசப்தமான இரவுகள் வரை
வாழ்க்கைச் சுமையின் இடறல்கள்!
ஒருவேளை உணவிற்கு
ஓராயிரம் பெருமூச்சில்
மேசையில் படுத்துறங்கும்
மின்சாரப் பட்டியலும் சேர்ந்தே கலக்கிறது!

கந்தறுந்த வாழ்க்கையின்
கனதிகள் சுமந்தவண்ணம் புன்சிரிப்பால்
புதுமைகள் செய்யக் கேட்கிறது
இந்தத் தார்மீகப் புத்தரின் நாடு!
உறவுகளைத் தேடி தெருவோரம்
அலையும்
எமை நோக்கி சுதந்திரம் பற்றிய
அரசின் தொலைநோக்குத் தத்துவங்கள்!

மனமென்ற சாக்கடையில் நெளியும்
இனவெறிப் புழுக்களால் ரணம் கண்டு
பிணமாகிய மேடையில் இன்று
விலைவாசியும் கூடி தள்ளம்பாடியே
தரிகினத்தோம் ஆடுகிறோம்!

சிங்க தேசத்தில்! புலிமேய்ந்த பாதையில்!
வறுமைக் கல்லறைக்குள் வளரும்
இளசுகளின்
இளமையைப் புதைக்காதீர்கள்!
வேண்டாம் மழையே நீயும் அழாதே!
நீ அழுவதனால் என் குடிசை
ஓட்டைகளும் சேர்ந்தே அழுகிறது!

– கி. ஜெ. மாலினி







# மேகமாய் வந்தாயோ

கண்ணடித்தது மின்னல்...
கைகளைத் தட்டி
வரவேற்றது இடி...
வெட்கப்பட்டு இருளைப்
போர்த்திக் கொண்டது
மேகம்...

முகம் கறுப்பாகி
அலைந்து திரிந்த முகில்களை
விரட்ட முயன்று
தோற்றுப் போனது காற்று...
பகல் முழுவதும்
வாட்டிய வெப்பம்
அகன்றிடுமா....

இதமான குளிர்மையின்
வருகைக்கான அறிகுறிகள்...
மேகத்திரையைக் கிழித்து
மண்ணுக்கு வாசம்
தந்திடவே வந்திடுவாளா...
இயற்கையின் கொடை
மழையெனும் தேவதை....


– சம்பூரணி



# அரசின் சிரத்தை

அவர்களின் எண்ணங்களில் இருக்கும்
எண்ணிக்கைதான் உண்மையானது
நாங்கள் தேடித் தேடி காத்திருக்கும்
நாட்களின் எண்ணிக்கை
தொலைக்கப் பட்டவர்களின்
எண்ணிக்கையை இன்னும் தொடவில்லை
கணக்கு சமன்படும் வரைதான்
காத்திருக்கிறார்கள்
அன்று நாங்களும் காணாமல்
போய்விடுவோம் என்பதுதான்
எங்கள் மீதான அரசின் சிரத்தை...

– இரவிகாந்தன்
திருகோணமலை





# வாழ்க்கை என்பது ஒரு தருணம்...!

தப்பிப்போன தருண மொன்று – அதை
தவற விட்ட காரணத்தால் – அது
எட்டி உதைக்க வருகிறது
எதுவும் செய்யத் தோன்றவில்லை..


தானாய் எல்லாம் கைக்கு வரும்
ஏனோ வேண்டும் வீண்மு யற்சி
அதிஷடம் இருந்தால் அனைத்தும் வரும்
அலட்டிக் கொள்ளத் தேவையில்லை, என...

பலருக்குள் இந்த மனோ நிலைகள்
பழக்க மான சங்க தியாய்
உள்ளே நுழைந்த காரணத்தால்
உவகை இழந்து தவிக்கின்றார்

கைக்கு வந்த தருணங்களை
கைப்பற்றிக் கொண்டவன் வாழ்க்கையிலே
வெற்றிக் கனிகள் நிச்சயமாய்
விரைந்து வந்து இனிமை தரும்.

வாழக்கை என்பதும் ஓர் தருணம்– அதன்
வகையை அறிந்து செயற்பட்டால்
ஏக்கம் கொள்ளத் தேவை யில்லை
எல்லாம் கைவசம் ஆகிவிடும்.!

– ஷெல்லிதாசன்
திருகோணமலை





பலஸ்தீன்

# காசா எல்லை திறக்கப்பட்டது

ஹமாஸ் தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் காசா மீது அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் கட்டடங்கள் மிகப்பெரிய அளவில் சேதம் அடைந்துள்ளன. சில ஏவுகணைகள் தவறுதலாக குடியிருப்புகள், முகாம்களில் மீது விழுந்து ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளனர்.

மேலும் காசா எல்லை மூடப்பட்டதால் பலத்த காயம் அடைந்தவர்கள், வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் காசாவில் இருந்து வெளியேற முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் மீண்டும் காசா எல்லை திறக்கப்பட்டுள்ளது.

இரட்டை குடியுரிமை, வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருக்கும் நூற்றுக்கணக்கானோர் மற்றும் பலத்த காயமடைந்தோர், எல்லை வழியாக வெளியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.




பாகிஸ்தான்

## “எங்களிடம் ஒன்றுமே இல்லை”



1979லிருந்து 1989 வரை அமெரிக்க உதவியுடன் ஆப்கானிஸ்தான் ரஷ்யாவை எதிர்த்து போரிட்டு வந்தது. பல வருடங்கள் நடைபெற்ற இந்த போரின் விளைவாக பொருளாதாரம் சீர்குலைந்து அந்நாட்டில் வேலைவாய்ப்புகள் குறைந்ததால், வாழ்வாதார காரணங்களுக்காக அங்கிருந்து பலர் வெளியேறி பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்தனர்.

கடந்த 2021இல் ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பினர் ஆட்சியை கைப்பற்றியதை தொடர்ந்து மேலும் பலர் அந்நாட்டிலிருந்து அண்டை நாடான பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்தனர். இந்நிலையில், சமீப காலமாக பாகிஸ்தானின் பொருளாதார நிலை மிகப்பெரும் சரிவை கண்டுள்ளது. இதனால் அந்நாட்டிற்கு கடன் வழங்கும் உலக நிதி அமைப்புகள் அரசின் செலவினங்களை கட்டுப்படுத்தும்படி நிர்ப்பந்தப்படுத்தி வருகின்றன. இதனால் தங்கள் நாட்டில் தஞ்சமடைந்துள்ள ஆப்கானிஸ்தானியர்களை வெளியேற்றும் நடவடிக்கையில் பாகிஸ்தான் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

எந்த ஆவணங்களும் இல்லாமல் பாகிஸ்தானில் தங்கியுள்ளவர்கள் முதற்கட்டமாக வெளியேற்றப்படுவார்கள் என்றும் அகதிகளுக்கான அட்டை வைத்துள்ளவர்கள் தங்க அனுமதிக்கப்படுவார்கள் எனவும் பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

வெளியேற்றப்படும் ஆப்கானியர்களில் பெரும்பாலானோர் கூலிப்பணிகளில் ஈடுபட்டு வறுமையில் வாழ்ந்து வந்ததால், அவர்களிடம் சேமிப்புகளோ, வேறு பொருட்களோ இல்லாமல் கேள்விக்குறியாகும் எதிர்காலத்துடன் டிரக்குகளில் அடைக்கப்பட்டு ஆப்கானிஸ்தான் எல்லையில் கொண்டு விடப்படுகின்றனர்.

காசா

## “தகுந்த பாடம் கற்றுக்கொடுப்போம்”

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் கடந்த 7ஆம் திகதி திடீரென தாக்குதல் நடத்தினர். அத்துடன், பலர் பிணைக்கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளனர். இதற்கு இஸ்ரேல் காசா மீது ஏவுகணைகளை வீசி பதிலடி கொடுத்து வருகிறது. இதனால் இரு பக்கமும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையிலான போரில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 10 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

இதற்கிடையே, இஸ்ரேல் இராணுவம் காசாவில் சரமாரி தாக்குதல் நடத்தி வருகிறது. புதன்கிழமை (01) அகதிகள் முகாம் மீது நடத்திய தாக்குதலில் 50-க்கும் அதிகமானோர் பலியாகினர். இந்நிலையில், “இஸ்ரேலுக்கு தகுந்த பாடத்தைக் கற்றுக்கொடுப்போம். ஒக்டோபர் 7ஆம் திகதி நடத்திய தாக்குதல் போன்று மீண்டும் நடத்துவோம்” என ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.



மகாராஷ்டிரா

## வெள்ளத்தால் வீணான ரூ.400 கோடி



மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் கடந்த சில நாட்களாக கனமழை கொட்டி தீர்த்தது. இதன் காரணமாக நாக்பூர் நகரமே வெள்ளம் ஏற்பட்டது. இதனால் வீடுகள், அலுவலகங்களில் மழை நீர் புகுந்து பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரின் ஆற்றங்கரையோரம் அமைந்துள்ள பேங்க் ஆஃப் மகாராஷ்டிரா வங்கி இந்த வெள்ளப்பெருக்கால் சேதமடைந்தது. மேலும், வங்கியின் பாதுகாப்புப் பெட்டகம் மற்றும் கையிருப்பு மையங்களில் வைக்கப்பட்டிருந்த ரூ.400 கோடி தண்ணீரில் மூழ்கி வீணானது.

இந்த தகவலறிந்து சம்ப இடத்திற்கு வந்த ரிசர்வ் வங்கி அதிகாரிகள் சேதமடைந்த ரூபாய் நோட்டுகளை பார்வையிட்டனர். இதனை தொடர்ந்து சேதமடைந்த ரூபாய் நோட்டுகளை ஸ்கேன் செய்து கணக்கில் எடுத்துக்கொண்டனர். பின்னர் சேதமடைந்த ரூபாய் நோட்டுகளுக்கு மாற்று ரூபாய் நோட்டுகளை வழங்கினர்.

மேலும், வெள்ளத்தால் ரூபாய் நோட்டுகள் சேதமானால் அந்த பணத்துக்கான இழப்பை வங்கி நிர்வாகம் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ரிசர்வ் வங்கி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.



உத்தரப்பிரதேசம்

## புருவத்தால் விவாகரத்து

உத்தரப்பிரதேச மாநிலம், கான்பூர் பாட்ஷாஹி நகரைச் சேர்ந்த இளம்பெண், கடந்த 2022இல் பிரயக்ராஜைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்து கொண்டார். அவரது கணவர் சவூதி அரேபியாவில் பணிபுரிந்து வருகிறார். இந்த நிலையில், கான்பூரில் உள்ள திருமண நிகழ்ச்சியில் அந்த இளம்பெண் கலந்து கொண்டுள்ளார்.

அப்போது அந்த பெண்ணுக்கு அவரது கணவர் சவூதி அரேபியாவில் இருந்து வீடியோ அழைப்பு மேற்கொண்டுள்ளார். அப்போது அந்த பெண் தனது புருவத்தைத் திருத்தியிருந்ததை பார்த்த கணவர் ஏன் புருவத்தைத் திருத்தினாய் என்று கேட்டு கண்டித்துள்ளார். அத்துடன், வீடியோ அழைப்பை துண்டித்து தொலைபேசியில் அழைத்து மனைவிக்கு தலாக் கூறியுள்ளார். இதனால் பாதிக்கப்பட்ட இளம்பெண், பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்ததையடுத்து, பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தெலுங்கானா



## “நான் மோடி அல்ல”

தெலுங்கானா மாநில சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, ராகுல் காந்தி தீவிர பிரசாரம் செய்து வருகிறார். இந்நிலையில் தெலுங்கானா மாநிலத்தில் நடந்த பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி, “நான் நரேந்திர மோடி அல்ல. நான் ஒரு வாக்குறுதியை அளிக்கும்போது அதை நிறைவேற்ற முயற்சி செய்வேன். பொதுமக்கள் ஒவ்வொருவரின் வங்கி கணக்குகளிலும் ரூ.15 இலட்சம் வெளிநாட்டில் மீட்கப்பட்ட கருப்பு பணத்தில் இருந்து டெபாசிட் செய்வதாக மோடி உறுதி அளித்தார். ஆனால், இதுவரை உங்கள் கணக்குகளுக்கு ஒரு ரூபாய் கூட மாற்றப்படவில்லை. அதானியின் வங்கிக் கணக்கில் பல இலட்சங்கள் குவிந்துள்ளன. மோடி போல் இல்லாமல் நாங்கள் எங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்” என கூறியுள்ளார்.



### உலகக் கிண்ணம்:

# நியூசிலாந்தை வீழ்த்திய தென்னாபிரிக்கா

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், பூனேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற நியூசிலாந்து உடனான போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

தென்னாபிரிக்கா: 357/4 (50 ஓவ. )

(துடுப்பாட்டம்: றஸி வான் டர் டுஸன் 133 (118), குயின்டன் டி கொக் 114 (116), டேவிட் மில்லர் 53 (30) ஓட்டங்கள். பந்துவீச்சு: ட்ரெண்ட் போல்ட் 1/49)

நியூசிலாந்து: 167/10 (35.3 ஓவ. )

(துடுப்பாட்டம்: கிளென் பிலிப்ஸ் 60 (50) ஓட்டங்கள். பந்துவீச்சு: கேஷவ் மஹராஜ் 4/46, மார்கோ ஜன்சன் 3/31, ஜெரால்ட் கொயட்ஸி 2/41, ககிஸோ றபாடா 1/16)

போட்டியின் நாயகன்: றஸி வான் டர் டுஸன்

இந்நிலையில், லக்னோவில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நெதர்லாந்தை ஆப்கானிஸ்தான் எதிர்கொள்ளவுள்ளது.

### இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக் கிண்ணத் தொடர்:

## வெளியேற்றப்பட்ட யுனைட்டெட், ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக் கிண்ணத் தொடரிலிருந்து நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் யுனைட்டெட், ஆர்சனல் வெளியேற்றப்பட்டுள்ளன.

தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற விலகல் முறையிலான இத்தொடரின் இறுதி 16 அணிகளுக்கான சுற்றில் நியூகாசில் யுனைட்டெட்டிடம் 0–3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்து தொடரிலிருந்து யுனைட்டெட் வெளியேற்றப்பட்டது.

இதேவேளை, வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1 – 3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்து தொடரிலிருந்து ஆர்சனல் வெளியேறியது.

### தனிப்பட்ட காரணங்களால் வீடு திரும்பியமையால்

## இங்கிலாந்துக்கெதிரான போட்டியில் மார்ஷ் இல்லை




சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், இங்கிலாந்துக்கெதிரான போட்டியிலிருந்து அவுஸ்திரேலியாவின் சகலதுறைவீரர் மிற்செல் மார்ஷ் விலகியுள்ளார். தனிப்பட்ட காரணங்களுக்காக அவுஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளமை காரணமாகவே மார்ஷ் விலகியுள்ளார். கோல்ப் விளையாடும்போது பின்புறமாக வீழ்ந்தமை காரணமாக தலைச்சுற்றால் குறித்த போட்டியில் கிளென் மக்ஸ்வெல்லும் விளையாட முடியாமல் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சாய்ந்தமருது பைன் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின்

## 15ஆவது ஆண்டு நிறைவு விழாவும் டீ சேர்ட் அறிமுகமும்




எம்.எஸ்.எம். ஸாகிர்

சாய்ந்தமருது பைன் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் 15ஆவது ஆண்டு நிறைவு விழாவும் அமைப்பின் டீ சேர்ட் அறிமுக நிகழ்வும் சாய்ந்தமருது அல்-ஜலால் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது 2008ஆம் ஆண்டு தொடக்கம் 2023ஆம் ஆண்டு வரையான சிரேஷ்ட விளையாட்டு வீரர் ஏ.எம்.எம். இர்ஷாத், நற்பிட்டிமுனையில் இடம்பெற்ற சம்பியன் கோப்பை 2022ஆம் ஆண்டின் சிறந்த அணித்தலைவர் எம்.பி.எம்.பௌசி மற்றும் சிறந்த பந்துவீச்சாளர் ஏ.எம்.அசாம், சிறந்த சகலதுறை வீரர் எச்.எம்.ருஷான் முஹம்மத், சிறந்த விளையாட்டு வீரர் எம்.ஜே.எம். ஆஷிக், வளர்ந்து வரும் வீரர் சிமாம் ஆகிய வீரர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### மாகாணத்தில் பங்குபற்றிய

## விசுவமடு பாரதி மகா வித்தியாலத்துக்கான சீருடைகள் வழங்கி வைப்பு

செ. கீதாஞ்சன்

வட மாகாண மட்டத்தில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் முல்லை கல்வி வலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி விசுவமடு பாரதி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 42 மாணவர் தடகள விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியதுடன் தேசிய மட்டத்துக்கும் தெரிவாகியுள்ளனர்.

இந்நிலையில், மாணவரை ஊக்கப்படுத்தும் நோக்கில் சுவிஸில் உள்ள நிஷான் டிஜிட்டல் உரிமையாளரும் விசுவமடுவில் உள்ள



புகழ்ப்பிறை உணவகம் விசுவமடு உரிமையாளருமாகிய நிசாந்தனின் நிதிப்பங்களிப்பில் 160,000 ரூபாய் செலவில் வீரர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வானது பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 03 நவம்பர் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.